(ஈ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2014), மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2014) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு) திரு. பாலகிருஷ்ணன், என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள்.*

***திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு முன்மொழியப்பட்டிருக்கிற வணிக வரித் துறை சட்டமுன்வடிவில் கரும்புக்கு விதிக்கப்பட்டிருக்கிற கொள்முதல் வரி என்பது நீக்கப்படுகிறது. அதேசமயம், அனைத்து வகையான சர்க்கரைக்கும் 5 விழுக்காடு வரி விதிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு 159 இலட்சம் டன் கரும்பு அரவை செய்யப்பட்டிருக்கிறது. கரும்பு ஒரு டன்னுக்கு ரூ.60/- என்று சொன்னால், ஏறக்குறைய 95 கோடி ரூபாய் நமக்கு* purchase tax, *கொள்முதல் வரியாக வந்திருக்கிறது. அதைத் தள்ளுபடி செய்வதன்மூலம் சர்க்கரை ஆலைகள் 90 கோடி ரூபாய் இலாபம் பெறும். 5 விழுக்காடு வீதம் 16.5 இலட்சம் டன் சர்க்கரை தமிழ்நாட்டில் உற்பத்தியாகிறது. அதற்கு 5 சதவிகித வரி என்று போட்டால், 213 கோடி ரூபாய் வரியை மக்கள் தலையில் சுமத்த வேண்டியிருக்கும். எனவே,*

@ 5–12–2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

2014 டிசம்பர் 8] [திரு. க. பாலகிருஷ்ணன்]

சர்க்கரை ஆலை முதலாளிகளுக்கு 95 கோடி ரூபாய் இலாபமும், மக்களுக்கு 213 கோடி ரூபாய் சுமையும் அளிக்கிற இந்தத் திருத்தத்தை நாங்கள் ஏற்கத் தயாராக இல்லை. எனவே, இதை நிராகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதியாதாரத்தினைக் கருத்தில்கொண்டு சர்க்கரைமீது உள்ளீட்டு வரியுடன்கூடிய மதிப்புக் கூட்டு வரி 5 சதவிகிதத்தை விதிப்பது என்று அரசால் முடிவெடுக்கப்பட்டு, 1-11-2014 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. முந்தைய ஆந்திர அரசு, தற்போது ஆந்திரபிரதேசம் மற்றும் தெலுங்கானா போன்ற அண்டை மாநிலங்களில் 2012-2013 ஆம் ஆண்டு முதல் 5 சதவிகித வரி சர்க்கரைக்கு விதிக்கப்பட்டு வருகிறது. இதனடிப்படையில் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.150/- முதல் ரூ.165/- வரை விலை உயர்ந்துள்ளது. எனினும், குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் சர்க்கரையின் விலையில் எந்தவித மாற்றமும் அரசு செய்யவில்லை. மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் நடுத்தர குடும்ப அட்டைதாரர்கள் வாங்கும் சர்க்கரை விலையில் எந்த மாற்றமும் இல்லை. கிலோ ஒன்றுக்கு ரூ.13.50 என்ற அளவிலே உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

@ 5–12–2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2-15

5. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(இ) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டமுன்வடிவு, 2014 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2014) பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—*தொடர்ச்சி*

(உ) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2014), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை